செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 234 நாள் : 21/04/2017

பத்திரிக்கை செய்தி

வேளாண்மைத் துறை

**உரவிற்பனையில் புதிய வழிமுறை**

விவசாய பெருமக்கள் சாகுபடி செய்து வரும் பல்வேறு பயிர்களுக்கு தேவையான உரங்களானது உரக்கட்டுப்பாடு ஆணை 1985ன்படி வேளாண்மைத் துறையின் மூலம் சில்லரை உர விற்பனை உரிமம் பெற்றுள்ள சில்லரை உர விற்பனையாளர்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக அரசு நிர்ணயிக்கும் விலையின் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போது தனியார் சில்லரை உர விற்பனையாளர்களுக்கும் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க விற்பனை மையங்களுக்கும் (Point of Sale), வேளாண்மைத் துறையோடு இணைந்து ஸ்பிக் உர நிறுவனத்தின் மூலம் விற்பனை இயந்திரம் (Billing Machine) 30.04.2017க்குள் வழங்கப்பட உள்ளது.

விற்பனை இயந்திரம் பெற சில்லரை உர விற்பனையாளர்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் கீழ்காணும் ஆவணங்களின் ஒளிநகலினை 25.04.2017க்குள், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

1. உர உரிம ஒளிநகல் (5 நகல்கள்)
2. ஆதார் அட்டை ஒளிநகல் (5 நகல்கள்)
3. நிரந்திர கணக்கு எண் அட்டை (PAN Card 5 நகல்கள்)
4. உரக் கண்காணிப்புத் திட்ட அடையாள எண் (FMS ID Number)

மேற்காணும் ஆவணங்களை ஒப்படைக்கும்பட்சத்தில் மட்டுமே 01.05.2017 முதல் விவசாயிகள் வாங்கும் உரங்களுக்கு விற்பனை இயந்திரம் வாயிலாக ரசீது அளித்திட அனுமதி வழங்கப்படும். இதுநாள்வரை கடைபிடிக்கப்பட்டு வந்த அச்சிடப்பட்ட ரசீது மூலம் உரங்கள் வழங்கப்படும் முறை 30.04.2017 முடிய ரத்து செய்யப்படுகிறது.

மேலும், 30.04.2017ற்குள் விற்பனை இயந்திரம் பெறாத உர விற்பனையாளர்களுக்கு, விற்பனை செய்திட, உர நிறுவனங்களாலும், மொத்த உர விற்பனையாளர்களாலும் உரங்கள் வழங்கப்பட மாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. எனவே தடையின்றி விவசாயிகளுக்கு உரங்கள் விற்பனை செய்திட இம்மாவட்டத்திலுள்ள சில்லரை உர விற்பனையாளர்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர்கள் உரிய நடவடிக்கையினை எடுத்திடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக

செ.ம.தொ.அ
வேலூர் - 9.
21/4/17

Thiru. Napoleon
ADA. Quality Control.
9443006661